www.tamilarangam.net


# புதிய பாதை

செப்டம்பர் 1984

காதம் 2 சுவடு 21


★

உள்ளே


எமது நோக்கு

ஒரு மைத்துனனின் கடிதம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் யுத்த தந்திரம்

கேள்வி பதில்

மக்கள் எம்மை மீட்டனர்

தோழா நான் உனக்கருகில்

இனி நம் குழந்தைகளும் போராடும்


★


அன்பளிப்பு 1.50

தமிழகத்தில் 75 காசு

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகாரபூர்வமான ஏடு


## விடுதலைப் போராட்டத்தில்

# உணர்ச்சிகளுக்கு இடம் கொடாது போராடுவோம்

தமிழ் மக்களின் போராட்டம் முன்னெப்போதும் இல்லாத அளவு ஓர் உயர்ந்த கட்டத்தை அடைந்துள்ளது. தமிழ் மக்கள் அனைவரும் தவிர்க்க முடியாதவாறு ஆயுதப் போராட்டத்தின்பால் தள்ளப்பட்டுள்ளனர்.

இயக்கங்களின் போராட்ட நடவடிக்கைகள் சிறு குழுக்களால் நடத்தப்பட்ட தனி நபர் அளவிலான தாக்குதல் நிலையில் இருந்து கெரில்லா தாக்குதல்களாக வளர்ந்து இன்று நிரந்தர இராணுவத்தைக் கட்டியெழுப்பும் நிலையை அடைந்துள்ளது. இயக்க நடவடிக்கைகள் கூட வெறும் சுவரொட்டிப் போராட்டம் என்ற நிலைமையை தாண்டி தெளிவான கொள்கைப் பிரகடனங்களுடனும், வேலைத்திட்டங்களுடனும் அமைப்பு நடவடிக்கைகளுக் கூடான கட்டமைக்கப்பட்ட ஸ்தாபனங்களாக வளரும் நிலைமை. சிறீலங்கா அரசு தனது பாசிச நடவடிக்கையின் காரணமாக சர்வதேச அரங்கில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக உலகெங்கும் உள்ள மொத்த சக்திகளினதும் சோசலிச முகாம்களினதும் கவனம் எமது போராட்டத்தின் பால் திருப்பப்பட்டுள்ளது. தென் இலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சிறீலங்கா ஆளும் வர்க்கத்தின் இனவாத கோசங்களையும் மீறி அங்கீகரித்து தமது வர்க்கப் போராட்டத்தையும் இதனுடன் இணைத்து முன்னெடுக்க முனையும் தன்மை போன்றவை தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சியைக் காட்டும் சில அம்சங்களாகும்.

தமிழ் மக்கள் உரிமைக்கான கோரிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இதனை இலகுவாக நசுக்கிவிடலாம் என்று கனவு கண்டவர்கள் இன்று விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி கண்டு தமது நம்பிக்கையை இழந்த நிலையில் ஏகாதிபத்திய உதவிகளும் CIA மொசாட் கூலிப்படைகளின் ஆலோசனைகளும் கூட மக்களின் போராட்டத்தை அடக்கிவிட முடியாது கண்டு பிரமித்துநிற்கிறார்கள். இந்த ஆயுத போராட்டம் இதே போக்கில் வளருமானால் அதன் முதிர்ந்த நிலையில் தாம் இதற்கு முகம் கொடுக்க முடியாது நிச்சயமாக தோல்வியையே சந்திக்க நேரும் என்பதை தெளிவாக அறிந்துள்ளார்கள்.

எனவே எமது இயக்கங்கள் தமது தயாரிப்பு வேலைகளை செய்து முடித்

(10-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

தமிழீழ விடுதலைப் போராட்டப் பாதையில் இப்போது ஒரு சிறிய ஆனால் ஆபத்தான திருப்பம் ஏற்பட்டு வருகிறது.

இதுவரை காலமும் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவரது அரசாங்கமும் பிடிவாதமாகவும் திமிராகவுமே நடந்துவந்துள்ளனர். ஆளும் ஆட்சியான யூ. என். பி. யின் செயற்குழு கூட்டங்களெல்லாம் இன வெறியைக் கக்குவதாகவே இருந்திருக்கின்றன.

எனினும் விடுதலைப் போராளிகளாகிய நாம் எல்லாவித சமரசங்களையும் நிராகரித்துவிட்டு ஆயுதப் போராட்டமே ஒரு முழுமையான விடுதலைக்கு இட்டுச் செல்ல முடியுமென்று அதற்காக மக்களை அணிதிரட்டுவதில் குறியாயிருக்கின்றோம்.

இனவெறிகொண்ட ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் தமிழீழத்தை முற்றுகையிட்டு தொடர்ந்தும் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருகின்றனர். இதற்குதவியாக அமெரிக்கா, பிரிட்டன், சீனா, தென்கொரியா பெல்ஜியம், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஆயுதங்களையும் படைத்தளவாடங்களையும் ஸ்ரீலங்காவிற்கு விநியோகித்து வருகின்றன. இஸ்ரேலிய 'மொஸாட்'' பயங்கரவாதிகளே தமிழினப் படுகொலைக்குப் புதிய உத்திகளை வகுத்துக்கொடுத்து வருகின்றனர். இதனால் உலக அரங்கில் ஜே. ஆரின் அராஜகமும், அரச பயங்கரவாதமும் மேலும் நிரூபணமாகி அவர்களின் செல்வாக்கு வீழ்ச்சியுற்று வருகிறது. ஆனால் ஒரு நீண்ட மேலாதிக்கத் திட்டத்தோடு ஏகாதிபத்தியமானது இலங்கையில் சதிச் செயலில் ஈடுபட்டிருக்கிறது என்பது தெரிந்திருக்கும்

முற்போக்கு உலகில் ஜே. ஆர். படிப்படியாக ஒதுக்கப்பட்டு வருவது தெரிந்திருக்கும்

வளைகுடா நாடுகளும் யூ. என். பி. அரசைத் தனிமைப் படுத்த முன்வந்திருப்பது தெரிந்திருக்கும்

தமிழீழதேசிய விடுதலைக்கு முற்போக்குச் சக்திகளின் ஆதரவு அதிகரித்து வருகிறது என்பது தெரிந்திருக்கும்

ஏகாதிபத்திய மேலாதிக்க வெறியர்களின் ஸ்திரமான ஆதரவு தொடர்ந்து கிடைத்துவரும் ஒரு இன வெறிகொண்ட முதலாளித்துவ அரசினால் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காணமுடியாது, என்பது தெரிந்திருக்கும்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் (!) ஆயிரக் கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்துவிட்ட ஜே. ஆரை இன்னமும் நம்பிக்கொண்டு (ஒருபோதும் தீர்வு காணமுடியாத தீர்வுகாண விரும்பாத) வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்கின்றார்கள். அதுவும் தமிழீழ விடுதலைக்காக உயிரையே பணயம்வைத்து போராடி வரும் போராளிகளின் அபிப்பிராயத்தையோ கருத்துக்களையோ, திட்டங்களையோ அறிய விரும்பாமலும் அவர்களை "புறக்கணித்த'' நிலையிலுமே கலந்து கொள்கின்றார்கள். (மக்கள் கூட்டணியை புறககணித்துவிட்டதுவேறு விஷயம்)

இந்தப் பின்னணியில் இப்போது அரசாங்க அறிக்கைகளையும், பத்திரிகைச் செய்திகளையும் பார்த்தால், இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக்காண யூ. என். பி. விரும்புகிறதாம். (''டெய்லி நியூஸ்'')

ஆயுதமேந்திய போராட்டத்திலீடுபட்டுள்ளவர்களைக்கூட பேச்சுவார்த்தைக்கழைக்க அதுலத் முதலி தயாராயிருக்கின்றாராம். (''ஐலண்ட்'')

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகாண இந்தியாவின் நல்லெண்ணத்தைப்பெற முன்வந்த அதேநேரத்தில் இஸ்ரேலின் உதவியையும் நாடிற்று, இஸ்ரேலிய நலன்காப்புப் பிரிவு கடந்த ஏப்ரலிலேயே கொழும்பில ஆரம்பிக்கப்பட்டாலும் இலங்கைக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான தொடர்புகள் ஓராண்டிற்கு முன்னரே ஏற்பட்டுவிட்டன; இத் தொடர்புக்கான முன்முயற்சிகள் இலங்கையிலோ இஸ்ரேலிலோ நடைபெறவில்லை மாறாக வட அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலுமே இடம்பெற்றன; நாங்கள் இப்போது ஆசியாவிற்குள் வந்துவிட்டோம்; இந்துமா சமுத்திரத்தில் இஸ்ரேலின் நடமாட்டம் இருக்கவில்லை, ஆனால் ஸ்ரீலங்கா எம்மை அழைத்தபோது நாம் அச் சந்தர்ப்பத்தை இறுகப் பற்றிக்கொண்டோம்'' இவ்வாறு ''மொசாட்'' குழுவிற்குத் தலைமைதாங்கிய டேவிட் மட்ஜய் கூறியுள்ளார். (ஐலண்ட்)

இலங்கை தமிழர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்க ஜனாதிபதி ஜயவர்தன இணங்குவதற்கு அமெரிக்கா விழிப் புணர்ச்சியுடனும், தொலைநோக்குடனும் உதவலாம்... ஜயவர்தன முன்வைத்துள்ள ''இரண்டாவது சபை'' திட்டம் தமிழர்களுக்கு அதிக அதிகாரத்தைக்கொடுக்கும்... பெரும்பாலான தமிழர்கள் விரும்புவது சுதந்திரமல்ல அரசாங்கத்திடமிருந்து நியாயமான பங்கைத்தான்... இந்தக் குழுவினரைப் பாதுகாத்து அதிகார உரிமையைக் கொடுப்பது ஜனாதிபதி ஜயவர்தனவைப் பொறுத்ததே. எனவே தீர்க்கதர்சனத்துடன் இலங்கைக்கு அமெரிக்கா உதவுவது நன்மையளிப்பதாயிருக்கும்'' (''நியூ யோர்க் டைம்ஸ்'' ஆசிரியர் தலையங்கத்திலிருந்து)

இந்தச் செய்திகளிலிருந்து தமிழீழப் பிரச்சனைக்கு ஒரு தீர்வை (!) காண வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ''இவர்கள்'' வந்திருப்பது தெரிகிறது.

இதற்குக் காரணமென்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு மைத்துனனின் கடிதம்

எமது இயக்கத்திலுள்ள ஒரு விடுதலை வீரனுக்கு அவரது மைத்துனர் வெளிநாட்டிலிருந்து எழுதிய கடிதமே இது. தமிழீழத்தைச் சேர்ந்த இவர் எவ்வித உணர்வில் வாழ்கின்றார் என்பதை இக்கடிதம் காட்டுகின்றது. பெயர்களையும் அவரிருக்கும் நாட்டையும் மட்டும் தவிர்த்துவிட்டு கடிதத்தை முழுமையாக இங்கு பிரசுரிக்கின்றோம்.

அன்பின் ... ...

நாம் நலமே. உனது கடிதம் கிடைத்தது மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தோம் ஒரு மனிதன் தன் வாழ்வில் தன் பிறந்த குடும்பத்திற்கும் இனத்திற்கும் சேவை செய்ய வேண்டிய கடமையுண்டு. நானும் உனது வயதில்இரண்டிற்கும் சேவை செய்தேன். அப்போதைய காலகட்டத்தில் அவ்வழியில் முயற்சித்தேன். தற்போதைய காலகட்டத்தில் போராட்டம் என்பது தவிர்க்க முடியாத முடிவாகி விட்டது. அம் முடிவிற்கு எம் குடும்பமும் தனது பங்கைச் செலுத்துவதையிட்டு மிக மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். குடும்பப் பொறுப்பைபற்றி சிறிதும் யோசிக்க வேண்டாம்உன்னை எனது மைத்துனனாகப் பெற்றதையிட்டு நான் பெருமைப் படுகின்றேன். நீ மேற்கொள்ளும் கடமை புனிதமானது. மிக உற்சாகத்தோடு ஈடுபடு. உடம்பை நன்கு பார்த்துக் கொள். நித்திரை செய். (சிகரெட்டு குடிப்பதை நிற்பாட்டு) உனது மேற்பார்வையாளர்கள் கூறுவதை ஏற்று நட. நன்கு பயிற்சி செய். எதிரியைக் கொல்வதில் தயக்கம், இரக்கம் எதுவுமே உனக்கு ஏற்படக் கூடாது. எதிரியை அழித்து உனது இனத்தைக் காப்பதில் உனக்கு பாவம் கிடையாது. அதைத்தான் பகவத் கிதை கூறுகின்றது. ''மேனியைக் கொல்லாய் விபத்தில் அதுவும் ஒன்று'' நீ தயங்கும் ஒருகணம் கூட எதிரி உன்னைத் தாக்கக் கூடும். எனவே குடும்ப பொறுப்பு எதையும் மனதில் நினைக்காதே!—ஒரு நல்ல நிலைக்கு எப்பாடு பட்டாவது உயர்த்துவது என் பொறுப்பு மற்றவர்களும் அப்படியே. மருமக்கள் சந்தோசமாக ஈர்கள். உள்ள அவர்கள் வருங்காலத்தில் தங்களுக்கு இப்படி ஒரு மாமன் இருந்தார் என்று பெருமைப் படக் கூடியதாக இருக்கும். நீ மேற்கொண்ட காரியம் வெற்றியடைய நீ வெற்றியுடன் திரும்ப வாழ்த்தி அனுப்பும்.

அன்பின்

அத்தான், அக்கா, மருமக்கள்

---

1) தமிழீழப்பிரச்சனை இப்போது சர்வதேசமட்டத்திற்குச் சென்றுவிட்டது.

2) தமிழீழப் போராட்டம் நியாயமானது என்று உலக முற்போக்குச் சக்திகள் உணர்கின்றன.

3) தமிழீழதேசியவிடுதலை இயக்கம் சோஷலிசத் திசை வழியில் செல்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

4) இந்த நிலமையில் தென்னிலங்கையிலுள்ள முற்போக்குச் சக்திகளும் அரசிற்கெதிராக போராட ஒன்றிணைவது யதார்த்தமாகிவிட்டது.

5) இது முதலாளித்துவத்திற்கு மிகுந்த ஆபத்தானது எனவே இதற்கு உடனடியாகவே முட்டுக்கட்டை பாடப்படவேண்டும்.

இவைதான் காரணிகளாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இப்படியே விட்டுவிட்டால் விடுதலை இயக்கங்கள் தமிழர்களிடையேயுள்ள முதலாளித்துவச் சக்திகளைத் தூக்கி எறிந்துவிட்டு நிச்சயமாக சோஷலிச அமைப்பைக் கொண்டுவந்துவிடும். முதலாளித்துவச் சக்திகளுக்கே மீண்டும் தமிழ் மக்களை அடிபணியச் செய்துவிடுவதன் மூலமே அந்த மாற்றத்தைத் தடுத்து நிறுத்தமுடியும் என்பது ஜே ஆரின் கணிப்பாகும். அப்படி அற்ப சொற்ப சலுகைகளையும் கையாலாகாத அதிகாரங்களையும் பெற்றுக்கொண்டு கூட்டணி ஜே. ஆருடன் சமரசம் செய்துகொண்டால் எமது விடுதலைப் போராட்டப் பாதையில் ஒரு பெரிய ஸ்தம்பித நிலை ஏற்படும் இதுவரை காலமும் சிக்குப் பட்டிருந்த ஒடுக்குமுறை, பாகுபாடு பழிவாங்கல் என்ற நிலைமைக்குள்ளேயே தமிழ் மக்கள் மூழ்கடிக்கப்பட நேரும். தமிழீழத்தின் பொருளாதார சமூக விடுதலையில் தேக்கம் ஏற்படும். அனைத்துக்கும் மேலாக விடுதலை இயக்கங்களை ஒழித்துக்கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்படியொரு சமரசம் ஏற்படுவதை தடுக்க முடியாத அதற்குத் துணைபோகக் கூடிய சூழ்நிலையே ஜனநாயகத்தின் பெயரில் நடக்கும் பூர்ஷவா அரசுகளுக்கு ஏற்படும். ஆக இவற்றிற்கெல்லாம் விடுதலை இயக்கங்களே விலை கொடுக்க நேரும்.

இப்படியொரு தற்காலிகமானதும் ஆபத்தானதுமான மாற்றம் ஏற்படுவதற்கு இடமளிக்கக் கூடாது என நாம் கருதுகிறோம்.

இவ்வாறான விடுதலையைப் பலியிடக்கூடிய சோஷலிச விரோத தீர்வுகள் ஏறபடக் கூடிய சூழல் ஏன் உருவாகிறது என்பதைச் சிறிது ஆராய்ந்தால் நமது போராட்ட வரலாற்றின் இன்றைய கட்டத்தில் முற்போக்குச் சக்திகளைவிட பிற்போக்குச் சக்திகளே அதிகம் பலம் பெற்றிருக்கின்றன, ஐக்கியப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகும்.

எனவே முதலாளித்துவச் சாக்கடைக்குள் தமிழ் மக்கள் மீண்டும் சிக்கித் தத்தளிக்காமலிருக்கவேண்டுமானல், சோஷலிசத் திசைமார்க்கத்தில் உண்மையான தேசிய, பொருளாதார, சமூக விடுதலையை நோக்கி நாம் தமிழ் மக்களை வழிநடத்த வேண்டுமானல் இன்றைய இக்கட்டான கட்டத்தில் அனைத்து ஜனநாயக, முற்போக்கு' விடுதலைச் சக்திகளும் ஐக்கியப்படல் வேண்டும். ஒரு கூட்டுத் தலைமையில் பொது எதிரியை எதிர்த்துப் போராட முன்வரவேண்டும்.

தமிழீழத்தில் மட்டுமல்ல அகில இலங்கையிலும் ஒரு புரட்சிகர மாற்றத்தைக் கொண்டுவருவதற்கும் இது இன்றியமையாத தேவையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் யுத்த தந்திரம்

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. சரியான யுத்த தந்திரத்தை வகுப்பதன் மூலமே நாம் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லலாம்.

ஒவ்வொரு போராட்டத்தின் வெற்றிக்கும் சரியான யுத்த தந்திரம் அவசியம் தேவை. சரியான யுத்த தந்திரங்களை வகுப்பதன் மூலமே போர்கள் வெற்றியில் முடிந்துள்ளதைக் காணலாம். உதாரணமாக சாணக்கியன் வகுத்த யுத்த தந்திரமே சந்திரகுப்தமௌரியன் ஆட்சியைக் கைப்பற்ற உதவியது. இதேபோல் பாபர் வகுத்த யுத்த தந்திரமே இந்தியாவில் மொகலாயர் ஆட்சி உருவாவதற்கு ஏதுவாயிற்று. இதேபோல வேகிளேவ் தளபதியின் யுத்த தந்திரமே பிரித்தானியர் ஆட்சி இந்தியாவில் ஏற்படக் காரணமாயிற்று. இதேபோல் துட்டகைமுனு வகுத்த யுத்த தந்திரமே எல்லாளனை தோற்கடிக்க ஏதுவாயிற்று.

யுத்த தந்திரம் என்றால் என்ன? ஒரு யுத்தத்தை வென்றெடுப்பதற்கு கையாளப்படும் தந்திரம். யுத்தத்தை வென்றெடுப்பதற்கு அரசியல் ரீதியாகவும் ராணுவ ரீதியாகவும் சரியான தந்திரம் கையாளப்படவேண்டும். யுத்தம் என்பது அரசியலின் ஒரு தொடர்ச்சியே என உலகப்புகழ் பெற்ற இராணுவ யுத்த தந்திரசாலி வொண்கிளாவுடஸ் என்ற ஜெர்மன் நிபுணர் கூறியுள்ளார்.

யுத்த தந்திரத்தில் அடிப்படை நோக்கங்களை நாம் பின்வருமாறு கூறலாம். 1. எதிரியை தனிமைப் படுத்துவது. இது அரசியல் தந்திரோபாயங்கள் மூலமேஅடையலாம்.

2. எதிரியைப் பலவீனப்படுத்துவது. இது அரசியல், இராணுவப் போராட்டங்கள் மூலம் அடையலாம்.

3. எதிரியை அழிப்பது அல்லது சரணடையச் செய்வது. இது இராணுவப் போராட்டத்தின் மூலமே அடையலாம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்த மட்டில் எமது யுத்த தந்திரத்தின் முதற்படியாக எதிரியை அடையாளம் காணுவதும் எதிரியின் நண்பர்களை அடையாளம் காணுவதும் ஆகும். எமது எதிரிகளை நாம் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. உடனடி எதிரி:. சிங்கள பேரின வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சிறிலங்கா அரசு

2. மறைமுக எதிரி:- இலங்கையில் முதலீடு செய்து அதன்மூலம் இலாபம் அடையும் முதலாளித்துவ நாடுகளும் இலங்கையை கேந்திர முக்கியத்துவமாக கொண்டுள்ள ஏகாதிபத்திய நாடுகளுமாகும்

3. மக்களுக்குள்ளேயுள்ள எதிரி:- விடுதலைப் போராட்டத்திற்கும், போராளிகளுக்கும் எதிரான ஐந்தாம் படை வேலை செய்வோர்

நாம் இப்பொழுது உடனடி எதிரியைத்தான் எதிர் நோக்க வேண்டும. ஒரு கட்டத்தில் மறைமுக எதிரி நேரடி எதிரியாக மாறலாம்.

உடனடி எதிரியான சிறீலங்கா அரசுக்கு ஆதரவாக அரசு யந்திரம் அமைந்துள்ளது. அரசு யந்திரம் என்பது அரசு நிர்வாகமும் (அதிகாரிகளும்), இராணுவமும் ஆகும்.

### அரசியல் ரீதியாக தனிமைப் படுத்தல்

நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் அரசியல் ரீதியாக உடனடி எதிரியை தனிமைப்படுத்துவதையே அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். இதற்கு பின்வரும் நடைமுறைகளை கைக்கொள்ளலாம்.

1) தமிழீழ மக்களின் போராட்டத்தை ஐக்கியப்படுத்துதல்.

2) போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இயக்கங்கள் மத்தியில் ஐக்கிய முன்னணியை அமைத்தல்.

3) இப்போராட்டத்திற்கு ஆதரவாகவும் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்திற்கும் பங்கு பெற முஸ்லீம் மக்களதும், மலையகத் தமிழ் மக்களினதும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லல்.

4) சிங்களத் தொழிலாளர்களினதும், உழவர்களினதும் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தல்.

5) ஏனைய ஜனநாயக சக்திகளின் போராட்டத்திற்கு ஆதரவளித்தல்.

இந்நடவடிக்கைகள் மூலம் நாம் உடனடி எதிரியை தனிமைப்படுத்தி போராட்டத்தை முன்னெடுத்து

(9-ப் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கேள்வி பதில்

**கேள்வி : தென் இலங்கையிலுள்ள ஜனநாயக, முற்போக்குச் சக்திகள் எமது போராட்டத்திற்கு உதவும் சாத்தியம் உண்டா?**

பதில் : உண்டு! ஆனால் அது எடுத்த எடுப்பில் இன்றே நடக்கக் கூடிய தல்ல. தென் ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மிகவும் விசுவாசியாயிருப்பது ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவரது யூ. என். பி. கட்சியுமே. ஜனநாயகம் என்ற போர்வையில் அமெரிக்காவின் கைப் பொம்மைகளாக இவர்களிருக்கின்றனர். இந்த ''ஜனநாயகம்'' என்ற சொல்லை எடுத்துவிட்டால் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷிலுள்ள இராணுவ ஜனாதிபதிகளுக்கும் ஜெயவர்த்தனவுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. ஜெயவர்த்தன எந்தளவுக்கு ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளனாக இருக்கின்றாரோ அந்தளவுக்கு தமிழர் விரோதியாகவும் இருக்கின்றார். அதனால்தான் அவரது வர்க்கக் கூட்டாளியும் அமைச்சருமான தொண்டமானே நாடாளுமன்றத்தில் கூறியும்கூட தமிழர் பிரச்சனையை தமிழ் பூர்ஷ்வாக்கள், குட்டி முதலாளிகளுக்கும், முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஏற்றவிதத்திலாவது தீர்ப்பதற்கு ஜே. ஆர். முன்வரவில்லை. இன்று இலங்கையில் பொருளாதார, கலாசாரச் சீரழிவுகளும் வேலையில்லாத் திண்டாட்டமும், உற்பத்தி வீழ்ச்சியும் என்று மற்ற விதத்தில் அதிகரித்து வருகிறது. இதற்கெதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழுவதைத் தடுப்பதற்கும் தனது மக்கள் விரோத ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்குமாக, இனவாதத்தைத் தூண்டி விடுகின்றதும், வட, கிழக்கு மற்றும் மலையகத் தமிழர்களை அடக்குவதற்கென்று ஆயுதப்படைகளைத் தூண்டிவிடுவதுமே ஜே. ஆரின் தந்திரோபாயமாகவிருக்கிறது. இதைத் தென்னிலங்கையிலுள்ள ஜனநாயக, முற்போக்குச் சக்திகள்-குறிப்பாக இடதுசாரி கட்சிகள்—அறிந்தே இருக்கின்றன. ஆனால் ஜே. ஆரும் அவரது இனவாத அமைச்சர்களும் ''தமிழர்கள் சிங்கள மக்களின் பூமியைப் பறிக்கவும், சிங்களப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கவுமே போராடுகின்றனர். இதற்கு இடமளித்தால் சிங்கள இனமும் பௌத்த மதமும் அடியோடு ஒழிக்கப்பட்டுவிடும்'' என்றெல்லாம் தினசரி விஷத்தைப் பாய்ச்சி வருகின்றனர். இதற்கெதிராகப் பிரசாரம் செய்து சிங்கள மக்களுக்கு உண்மையை விளக்குவது இடதுசாரி கட்சிகளுக்கும் முற்போக்குச் சக்திகளுக்கும் இலகுவான காரியமாயில்லை. அத்துடன் ''நாட்டை கம்யூனிஸ மயமாக்கி மத, கலை, கலாசாரங்களையும் ஒழிப்பதே தமிழரின் திட்டம்'' என்றும் கூறி ஜே. ஆர். சிங்கள மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளார். ஆனால் இந்த பொய்கள் நீண்டகாலத்திற்கு நிலைக்க முடியாது. இதற்கான சில வெளிப்பாடுகளை இன்று தென்னிலங்கையில் காணக்கூடியதாயிருக்கிறது. பொருளாதார ரீதியில் சிங்கள மக்கள் வீழ்ச்சியடைந்து வரும் அதே வேளையில் யூ. என். பி.க்குள்ளும் முரண்பாடுகளும், பிணக்குகளும் ஏற்பட்டு வருகின்றன. எனவே தவிர்க்க முடியாதபடி முற்போக்குச் சக்திகளின் பின்னால் மக்கள் திரள்வார்கள் என்பதே வரலாற்று நியதி. ஆக இன்றைய முரண்பாடுகளையெல்லாம் நாம் சரியாகக் கையாண்டு, எமது அரசியல் சித்தாந்தத்தை தெளிவாக முன்வைத்து, போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது தென்னிலங்கையிலுள்ள ஏகாதிபத்திய விரோத முதலாளித்துவ எதிர்ப்பு முற்போக்குச் சக்திகள் நிச்சயம் ஆதரிக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் ஏகாதிபத்திய ஆதரவு முதலாளித்துவச் சக்திகளை முறியடிக்கவேண்டிய தேவை அவர்களுக்கிருக்கிறது. தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிக்காமல் சிங்கள முற்போக்குச் சக்திகளாலும் ஜே. ஆரின் பிற்போக்கு அரசை முறியடிக்க முடியாது. ஆனால் தென்னிலங்கை இடதுசாரிகளும் முற்போக்காளர்களும் எவ்வளவு தீர்க்கமாகவும், திட்டமிட்ட விதத்திலும் விரைவாகவும் செயற்படுவார்கள் என்பதைப் பொறுத்தே மக்கள் விரோத யூ. என். பியை புதைகுழிக்கனுப்ப முடியும்.

## அரசு உண்மை சொல்கிறது

அரசு தனது தொடர்பு சாதனங்களான பத்திரிகைகளிலும் வானொலியிலும் பயங்கரவாதிகள் இரண்டு பஸ்வண்டிகளை கடத்திச் சென்றதாகவும் அதில் பிரயாணம் செய்த பெண்களை பலாத்காரம் புரிந்ததாகவும் ஏனைய பிரயாணிகளை சுட்டுக் கொலை செய்ததாகவும் அறிவித்தது.

ஆம் உண்மைதான். இந்த பயங்கரவாதத்தை மக்களுக்கு இழைத்தவர்கள் பயங்கரவாதிகளே. இவர்களைத்தான் நாம் அரச பயங்கரவாதிகள் என்று கூறுகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**செப்டம்பர் 23**

### மட்டுநகர் சிறைமீட்பு நினைவு தினம்

# மக்கள் எம்மை மீட்டனர்

*குளிர்ந்துறைந்த சுவர்கள் கொண்ட*
*கொட்டிடச் சிறைக்குள்ளே*
*இருந்து வாடுகின்ற என்றன்*
*இனிமையான தோழர்காள்*
*இன்று எங்கள் அணிவகுப்பில்*
*இல்லை நீங்கள் ஆயினும்*
*என்றும் எங்களோடு நீங்கள்*
*இருக்கிறீர்கள் இருக்கிறீர்கள்*

வாழ்க்கை மகத்தானது. இதன் மகத்துவத்தையும் அதன் முழுமையான அம்சங்களையும் உணர்ந்து அதனை நேசிக்கின்றோம்.

இந்த வாழ்க்கையானது முழு வளத்துடன் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற வேட்கையே எம்மைப் போராளிகளாக்கியது.

போராட்டம் என்பது மிகக் கடினமானது இனவாதம் பாசிசம் போன்ற உணர்வுகளை விதைத்து விட்டு அனைத்து மக்களுக்கும் கிடைக்கவேண்டிய வாழ்க்கையின் மகத்துவங்களை ஒரு சிறு குழு அனுபவிக்க முனையும் வரை அரசு, சட்டம், மதம், இராணுவம், நீதிமன்றம், சிறைச்சாலை கலை கலாச்சாரங்கள் போன்ற அனைத்தையும் பாவித்து மக்களை ஒடுக்குவதற்கு அந்தக் குப்பல் முனையும் வரை தாமாக ஏனைய மக்களின் உரிமைகளை, செல்வங்களை விட்டுக் கொடுக்க முன்வராத வரை பரந்துபட்ட மக்களின் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பு அளிக்காதவரை போராட்டம் என்பது கடினமானது.

சமாதானத்தை நேசிக்கின்றோம் அந்த சமாதானம் அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே, ஒடுக்கு முறைக்கும் சர்வாதிகாரத்திற்கும் எதிராக போர் தொடுத்துள்ளோம். புத்தன், யேசு, காந்தி போன்றோர் கற்பனை செய்த தமது போதனைகளால் கொண்டு வர முடியாத உண்மையான சமாதானத்தை எமது போராட்டம் கொண்டு வரும் என்று உறுதியாக நம்புகின்றோம்.



வாழ்க்கையில் உள்ள நேசமும் சமாதானத்தின் பால் உள்ள விருப்பமும் எம்மை ஓரணியில் திரட்டிய ஆயுதமேந்திப் போராட வைத்ததேயன்றி எமது விரக்தியோ தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட தோல்வியோ அல்ல.

போராட்டத்தின் கடுமை எம்மை நிர்பந்தித்தபோது எமது வாழ்வின் வசந்தங்களைக்கூட விட்டுக் கொடுத்தோம். இது இளமையின் வசந்தத்தின் இனிமையை அறியாத மனோ வியாதியால் அல்ல, துறவறத்தின் பால் ஏற்பட்ட நம்பிக்கையால் அல்ல.

எப்போது எம்மை மக்களிடம் ஒப்படைத்தோமோ அப்போதே

(8-ம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தோழா! நான் உனக்கருகில்

எண்ணங்களால்
தோழா!
நான் உனக்கருகில்
உன்காட்சிக்குத் தெரியாத வகையில்
நீ கேள்விப் படாத வகையில்
தொலேவில்
சுற்றிலும் நான்கு சுவர்களுக்குள்
சங்கிலியால்
பிணைக்கப்பட்டு இருந்தாலும்
வதைகளால்
நினைவிழந்த நேரங்களைத்தவிர
எப்போதும்
தோழா நான் உனக்கருகில்
உன்னைப் பற்றியும்
இயக்கத்தைப்பற்றியும்
அவர்கள் என்னைக்
கேள்விகள் கேட்கும்போது
அடித்து அடித்து
அவர்கள் என்னில்
கறக்க முயல்கையில்
இரத்தம் தான் கசிகிறது
விஷயங்கள் அல்ல
எனக்காக கவலைப்படாதே!
இப்போதெல்லாம்
வதைகளைத் தாங்கும் பயிற்சியில்
தசைகள் தேறிவிட்டன
வசவுகளைப் பொறுக்கும் பயிற்சியில்
செவிகள் தேறிவிட்டன
பிறந்த மேனியாய்
பேசா ஊமையாய்
இருக்கப் பழகிவிட்டேன்
இப்போ தெல்லாம்
வெளிச்சத்தை
விழியால் நோக்க முடியவில்லை
நீர்தான் வழிகிறது
இரவு பகல் பிரிவுகளைக் கூட
பறவைகளின் ஒலியால்தான்
புரிந்துகொள்ள முடிகிறது
அதிகாரிகளின் கெடு பிடிகளால்
திடீர்த் தாக்குதல்களால்
நமது போராட்டத்தின்
வளர்ச்சியை
புரிந்துகொள்ள முடிகிறது
தொலேவில் கேட்கும்
கடல் அலைகளின் ஒலிகூட
மீண்டும் மீண்டும்
அதே பாடத்தைத்தான் கற்பிக்கிறது
''நம்பிக்கையுடன் இரு'' என்று
இனி அவர்கள்
என்பால் செய்வதற்கு
புதிதாக ஒன்றும் இல்லை
இதுவரை
எனக்காக வைத்த
உளவியல் சோதனைகள்
கூர்மழுங்கிய கோடாரிகள்தான்
அவர்களின் புலனாய்வுக்கு
இனி நான்
கீறல் விழுந்த இசைத்தட்டுதான்
ஒருவேளை உடைத்தெறியலாம்
அதுவிரைவிலும் நடக்கலாம்
ஏனெனில்
நான் நியாயமாக
நடக்கவில்லையாம்
அவர்கள் அகராதிப்படி
நம் அகராதியின்படி
தோழனே நீ
எச்சரிக்கையாக இரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரபல சமூக சேவகி அன்னத்தாய் கைது

பிரபல சமூக சேவகியும் மலையக மக்களின் மறுவாழ்விற்காக ஹட்டன் கிறிஸ்தவ தொழிலாளர் முன்னணியினூடாக சேவையாற்றியவருமான திருமதி அன்னத் தாய் அபயசேகரா கைத செய்யப்பட்டார்.

இவர் உலகப் பெண்கள் விடுதலைத் தாபனத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஆசிய பெண்கள் விடுதலை இயக்கத்தின் தலைவிகளில் ஒருவருமாவர்.

இவர் மலையகத்தில் வாழும் ஏழைத் தமிழர்களுக்கு உதவி செய்வதைப் பொறுக்க முடியாத அரசு பயங்கர வாதிகளோடு தொடர்பு உள்ளதாக கூறி கைது செய்துள்ளது.

இதுவரை இவர் கைது பற்றி அறிவிக்கவோ, இவர் வைக்கப்பட்டிருக்கும் இடம் பற்றிய தகவலையோ அரசு வெளியிடவில்லை. இது மக்கள் மத்தியில் பெரிதும் சந்தேகங்களை கிளப்பியுள்ளது. இவரது கணவர் முற்போக்கு இடதுசாரி இயக்கங்களுடன் தொடர்புடையவர்.

(6-ம் பக்க தொடர்ச்சி)

நாம் மக்களின் சொத்துக்களாக ஆனதை உணர்ந்தோம்.

மக்கள் எமக்கு அகிம்சையைக் கற்றுக் கொடுத்தார்கள். எம்மை போசித்தார்கள் களைப்புற்றபோது உற்சாக மூட்டினார்கள் ஆக்கிரமிப்பாளர்கள் தேடியபோது பாதுகாத்தார்கள். புத்துணர்வூட்டி மீண்டும் மீண்டும் போராட வைத்தார்கள்.

போராட்டம் எமது வாழ்க்கைக்கு புதிய அர்த்தத்தைக் கொடுத்தது. புதிய நம்பிக்கையை ஊட்டியது. நாம் மக்களின் சொத்து என்ற உணர்வு எமது எண்ணங்களிலும் செயலிலும் பல புதிய பரிமாணங்களை ஏற்படுத்திற்று. இனி வாழ்நாள் முழுவதும் மக்கள் விரோதிகளுக்கு எதிராக போராடுவது என்ற உறுதியை ஏற்படுத்திற்று. இந்த உறுதியே மிகக் கடினமையான காலத்திலும், மரணத்தின் விளிம்பிலும் எம்மை உறுதியாக, நிலைகுலையாது பேணியது.

எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டபோது தற்கொலை செய்யநாம் முனையவில்லை. ஏனெனில் எமக்கு அந்த உரிமையை மக்கள் தரவில்லையே. துப்பாக்கியில் உள்ள ரவைகள் திரும்வரை எதிரியை நோக்கியே சுட்டோம். கைது செய்து வதை முகாம்களில் துன்புறுத்திய போதும், உணர்விழக்கும் வரை தாக்கிய போதும், மின்சாரம் பாய்ச்சிய போதும் கூட நாம் தளர்ந்து விடவில்லை. உலகமக்கள் அனைவருக்குமாக சிலுவையில் அறைந்த யேசு துன்பங்களை தாங்கியதாக கூறும் அந்த பெருமிதம் எம் உறுதியை பேணியது. சிறைச்சாலை, வதை முகாம்களில் கூட எமது போராட்ட களமாகவே விளங்கியது. சில தோழர்கள் இந்த உளவியல் சோதனைகளில் தோல்வியுற்றது உண்மைதான். ஆயினும் எமது நெஞ்சுரம் எதிரியை தலைகுனிய வைத்தது.

வெலிக்கடை சிறைச்கூடத்தில் பேரின வாதத்தின் கூலிகள் நிராயுத பாணிகளான எம்மை தாக்கிய போதும் கூட நாம் போரிட்டோம். பலர் வீர மரணம் எய்தினர். இந்த தியாகங்கள் கூட எமது மக்கள் போராட்டத்தை சர்வதேச மட்டத்தில் உயர்த்தவே பயன்பட்டன.

எமது தொடர்ச்சியான போராட்ட உணர்வு மக்களின்மேல் ஏற்படுத்திய தாக்கமே எம்மை சிறையிலிருந்து மீட்டெடுக்க மக்களைத் தூண்டியது.

ஆம். மக்கள் தமது சொத்துக்களை மீட்டெடுத்தார்கள். தங்கள் கடமைகளை செவ்வனே செய்தார்கள்.

இன்று மீண்டும் நாம் களத்தில் புதிய அனுபவங்களுடன் புத்துணர்வு பெற்று புதுப்பொலிவுடன் போராடத் தொடங்கியுள்ளோம். கடந்த கால அனுபவங்கள் எமக்கு புதிய எச்சரிக்கைகளையும், நிதானத்தையும், புதிய கருத்துக்களையும் தந்துள்ளது. உண்மையில் எம்மை புடம் போட்டுள்ளது.

எதிரியின் சுற்றி வளைப்பின் போது தற்கொலை செய்து கொண்டவர்களை இன்று நினைத்துப் பார்க்கிறோம். அவர்களது உணர்வுகள் உயர்வானவைதான். ஆயினும் தொடர்ந்து இந்தப் போராட்டத்தில் மீண்டும் கலந்து கொள்ளும் ஒரு வாய்ப்பை அவர்கள் இழந்து விட்டார்களே என்ற துயரம் ஈடு செய்ய முடியாததே!

"ஒரு புரட்சிவாதி புரட்சி வெற்றி வாகை சூடும்வரை அல்லது தான் கைது செய்யப்படும்வரை அல்லது கொலை செய்யப்படும்வரை தனது பணிகளை செய்தே தீரவேண்டும்" என்ற ஹோ-சி-மின் இறுதி உயிலில் கூறியுள்ளபடி தமிழீழ விடுதலைக்காக போராடும் சகல போராளிகளும் தமது இறுதி மூச்சுவரை இலட்சியத்துக்காக போராடியே தீரவேண்டும்;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



4.ம் பக்க தொடர்ச்சி

செல்லலாம். நாம் முன் வைக்க வேண்டிய சுலோகங்கள்.

1) தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்கவேண்டும்.

2) மலையகத் தமிழ் மக்களுக்கு தொழிற்சாலைகளை வழங்கவேண்டும், தோட்டங்கள் அவர்களின் உடமையாக்கப்பட வேண்டும். 1948-ல் சட்டம் நிராகரிக்கப்பட வேண்டும்.

3) சிறீலங்காவிலுள்ள சகல மக்களுக்கும் ஜனநாயக உரிமை வழங்கப்படவேண்டும். மறைமுகமான எதிரி நேரடி எதிரியாக மாறும் போது நாம் எமது போராட்டத்தை ஏகாதிபத்திய அல்லது பேலாதிக்க எதிர்ப்பு போராட்டமாக மாற்ற வேண்டும். இக்கட்டத்தில் சிங்கள பேரினவாத அரசின் யந்திரத்தின் ஒரு பகுதியும் எம்மோடு சேருவதால் நாம் முன்வெடுக்க வேண்டிய சுலோகங்களிலும் மாற்றங்கள் தேவைப்படும்.

## இராஜ தந்திர ரீதியாக தனிமைப் படுத்தல்.

சிங்களப் பேரினவாத அரசின் இனவெறிக் கொள்கைக்கு எதிராகவும் ஏகாதிபத்திய அடிவருடிக் கொள்கைக்கு எதிராகவும் நாம் வெளிநாடுகளில் சரியான நடைமுறைகளைக் கையாளவேண்டும்.

1) சிங்களப் பேரினவாத அரசின் இனவெறிக் கொள்கைக்கு எதிராக மக்களின் ஆதரவைத் திரட்டல்.

2) மனித உரிமைகள் அடிப்படையிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அடிப்படையிலும் பரந்துபட்ட மக்கள் ஆதரவைத் திரட்டல்.

3) உலகில் வாழும் தமிழர்கள் மத்தியில் சிங்கள இனவெறி அரசுக் கொள்கைக்கு எதிராக ஆதரவைத் திரட்டல். இந்த ஆதரவை நாம் மேற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்ற நாடுகள் எமது உடனடி எதிரிக்கு ஆதரவு தரவிடாதவாறு தடுக்கப் பயன்படுத்தல்.

4) உலகிலுள்ள சகல உண்மையான தேசிய முற்போக்கு இயக்கங்களின் ஆதரவைப் பெறல்.

5) சோசலிச நாடுகளின் ஆதரவைப் பெறல்.

6) மூன்றாவது உலகநாடுகளின் ஆதரவைப் பெறல்.

7) முதலாளித்துவ அரசியல் கைப்பொம்மையாக தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் மாறாமல் பார்த்துக் கொள்வது.

இராஜ தந்திர ரீதியான யுத்த தந்திரமும் அரசியல் ரீதியான யுத்த தந்திரமும் எதிரியைத் தனிமைப் படுத்துவதுடன் பலவீனப்படுத்தும். இறுதியில் இராணுவரீதியான யுத்த தந்திரமே எதிரியை தோற்கடிக்கச் செய்யும். எனவே இந்த ஆய்வுக் கட்டுரையில் இதைப்பற்றியே கூடுதலாக நாம் ஆராயவேண்டியுள்ளது.

தமிழீழப் போராட்டம் ஏனைய நாடுகளில் நடக்கும், நடந்த தேசிய விடுதலைப் போராட்டங்களிலிருந்து சில வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.

1) சிறுபான்மையினம் போராட்டத்தை நடத்துகின்றது. எனவே மனித எண்ணிக்கைகள் போராட்ட முறையில் ஒரு தாக்கத்தை தரும்.

2) அடக்கும் அரசு ஒரு பேரினவாத அரசு. இவ்வரசு ஒரு ஏகாதிபத்திய அரசோ, காலனித்துவ அரசோ அல்ல. எனவே தமிழ் தேசிய இனத்தை முற்றாக அழித்தொழிக்க தயங்காது.

3) அரசு யந்திரம் முற்றாகவே போராட்டத்தை எதிர்க்கும். எமது போராட்டம் உச்சகட்டத்தை அடையும் போது அரசு யந்திரத்தின் ஒரு பகுதி ஒதுங்கலாம். ஆனால் எம்முடன் சேரமாட்டாது'' இந்த அடிப்படையில் நாம் பார்க்கும்போது கியூபா புரட்சி, வியட்நாம் புரட்சி, சீனப் புரட்சி ஆகியன எமது போராட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டன.

4) சிங்களப் பேரினவாத அரசு தமிழீழத்துக்கு அண்மையிலுள்ள நாடு. எனவே எதிரியின் நடமாட்டத்திற்கான வசதிகள் கூடுதலாக உள்ளன.

## இராணுவ ரீதியான யுத்த தந்திரம்.

கியூபா புரட்சியின் போராட்ட முறையை எடுத்துப் பார்த்தால் ஒரு சிறிய இயக்கம் காடு, மலைப் பிரதேசத்தில் தளங்களை அமைத்து தொடர்ச்சியான போராட்டத்தின் மூலம் ஒரு சர்வாதிகார ஆட்சியை தோற்கடித்தது. தொடர்ச்சியான கெரில்லாப் போராட்டத்தில் எதிரி பலவீனப் படுத்தப்பட்டு ஈற்றில் அரசு படைகளில் பெரும் பகுதியும் மக்களும் கெரில்லாக்களுடன் சேர போராட்டம் கெரில்லாப் போராட்டத்திலிருந்து நிலைகளுக்கான போராட்டமாக மாறி ஈற்றில் முந்தாக்குதல் போராட்டமாக மாறியது. ஆனால் கியூபா புரட்சி முறைகளை ஏனைய லத்தின் அமெரிக்க நாடுகளில் திருப்பி செய்ய முடியவில்லை, ஏனெனில் (1) அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது நடைமுறைகளை மாற்றிக் கொண்டது. (2) காஸ்ட்ரோ தலைமையில் யூலை 26ம் இயக்கத்திற்கு கியூபா மக்கள் மத்தியில் இருந்த ஆதரவைப் போன்ற ஆதரவை ஏனைய இயக்கங்கள் வேறுநாடுகளில் பெற்றிருக்கவில்லை.

நிக்கரகுவா புரட்சியில் வேறு நடைமுறைத் தந்திரங்கள் கையாளப்பட்டன. கியூபா புரட்சியை மையமாக வைத்து தளக்கொள்கையை உருவாக்கி செகுவேரா அந்த முறையை பொலிவியாவில் கையாள முயன்று தோலவி கண்டு இறந்தார்.

எனவே நாம் கியூபா, வியட்நாம், சீனா போன்ற நாடுகளில் கையாளப்பட்ட தொடர்ச்சியான கெரில்லா போராட்ட முறையை தமிழீழத்தில் கையாளலாமா என ஆராய வேண்டும்.

கெரில்லாத் தாக்குதல்கள் ஒரு ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தேவைப்படுகின்றது. இதைப்பற்றி பகத்சிங்கின் நீதிமன்ற உரையில் :

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''குண்டு அடக்கப்படும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. நேற்று பல்லக்கிலும், குதிரை வண்டியிலும் சவாரி செய்த அடக்குமுறை அதிகாரி இன்று நிலத்தில் விழ இவனும் சாதாரண மனிதனே என்ற உணர்வு அடுக்கப்படம் மக்களிடம் ஏற்படுகின்றது, நாம் கையாளும் முறை பயங்கரவாதமெனில் இது அரசுக்கு பயங்கரவாதம்''

கெரில்லாத் தாக்குதல்கள் மக்கள் மத்தியில் ஆரம்பத்தில் அரசு பயங்கரவாதத்துக்கு எதிராக நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. அத்துடன் எதிரியைக் கலங்கச் செய்கிறது. இதனுல் எதிரி கடுமையான அடக்குமுறையை கட்டவிழ்த்துவிடுகிருன். இக்கட்டத்தில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்படுகின்றனர். தொடர்ந்தும் கெரில்லா தாக்குதல்களை நடத்துவதா என்பதை பற்றி நாம் ஆராய வேண்டும்.

முதல் படியிலான கெரில்லாப் போராட்டங்கள் அத்தியாவசியமானவை. இவை எந்த நாட்டிற்கும் பொருந்தும். தொடர்ந்து நடாத்தும் தாக்குதல்கள் மூன்று வகைப்படும்.

1) நாட்டின் மக்கள் ஆதரவு கூடிய பகுதியில் கெரில்லாத் தாக்குதல்கள். இத்தாக்குதல்கள் அரசு யந்திரத்திற்கெதிராக பிரதானமாக அமைந்திருக்கிறது.
2) நாடு பூராவும் பரவிய அடிப்படையில் கெரில்லாத் தாக்குதல்கள்.
3) அரசை பலவீனப்படுத்தும் தாக்குதல்கள்.

முதலாவது வகையை எடுத்துக் கொண்டால் தமிழீழத்தில் எமக்கு கூடுதலான ஆதரவான பகுதி யாழ்ப்பாண மாவட்டமாகும். ஆனுல் யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூகப் பின்னணி நீண்டகால அடிப்படையில் தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்களையும் அதன் விளைவான அடக்கு முறையையும் தாங்க முடியுமா என்பது கேள்விக்குறியாகும். அடுத்தபடியாக சிங்கள மக்கள் எங்கள் போராட்டத்திற்கு ஆதரவாக மாறுவார்கள் (இந்தக் கடும்தாக்குதல்களால்) என்பது கேள்விக்குறி.

2) நாடு பூராவும் பரவிய அடிப்படையில் அரசு யந்திரத்துக்கு எதிராக கெரில்லாத் தாக்குதல்கள் மேற்கொள்வது தமிழீழத்தில் புவியியல் அடிப்படையில் நடைமுறைக்கு ஒவ்வாதது.

3) அரசை பலவீனப் படுத்தும் தாக்குதல்கள் எமது போராட்டத்திற்கு உதவலாம். எதிரி பொருளாதார ரீதியாக மிகவும் பலவீனமானவன். எனவே பலவீனப்படுத்தும் தாக்குதல்கள் எதிரியின் போர் புரியும் திறமை கூடுதலாகப் பாதிக்கும்

எனவே எமது போர்த் தந்திரமாக அரசை பலவீனப்படுத்தி தாக்குதல்களை மேற்கொள்ளலாம். இதன் மூலம் எதிரியின் யுத்த முயற்சிகள் பாதிக்கலாம்.

இக்கட்டத்தில் எமது போர்த் தந்திரத்தையும், யுத்த தந்திரத்தையும் பார்க்க வேண்டும். இராணுவ, போர்த்தந்திரம் என்பது பொருளாதார நாசவேலைகள் மூலம் எதிரியை பலவீனப்படுத்துவது. இராணுவ யுத்தத் தந்திரம் என்பது எதிரி பலவீனப்பட்ட பின்னர் சர்வதேச, உள்நாட்டுச் சூழ்நிலைகள் சாதகமானதும் ஒரு முழுத் தாக்குதல் செய்தல். யுத்த தந்திரத்தை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது இதற்கடுத்து ஆராய வேண்டும்.

---

(முதற் பக்கத் தொடர்ச்சி)

காத நிலையில் ஒரு வலிச்சண்டைக்கு இழுத்து எம்மைத் தோற்கடிக்கலாம் என்று எண்ணுகின்றது. இதன் வெளிப்பாடுகள் தான் எப்படியாவது இயக்கங்களை உணர்ச்சி வசப்பட வைத்து போராட்டத்தில் குதிக்குமாறு நிர்ப்பந்திக்கச் செய்யும் வகையில் அரசும் இராணுவமும் நடந்து கொள்ளும் முறைகள். இப்போதெல்லாம் இயக்கங்களின் சிறு நடவடிக்கைகளை சாட்டாகக் கொண்டு பல நூற்றுக்கணக்கான மக்களை கொலை செய்கின்றுர்கள். மக்கள் உடைமைகளைத் தீயிடுகின்றுர்கள். பெண்கள் மீது பலாத்காரம் புரிகின்றுர்கள்.

எப்படியாவது இயக்கங்கள் உணர்ச்சி வசபபட்டு போராட்டத்தில் குதிக்கமாட்டாதா என்று எதிர்பார்ககிறுர்கள். போராட்டத்துககு தேவையான குறைந்த பட்ச ஆயுதங்களை கூட செய்து முடிக்காத இன்றைய நிலையில் நாம் யுத்தத்தில் குதிக்க நேருமாஞல் முற்ருக அழித்தொழிக்கப்படுவது தவர்க்க முடியாது என்பதனை இயக்கங்களினதும் எதிரியினதும் பலம் அறிந்த எவரும் மறுக்க மாட்டார்கள்.

எனவே இப்போது நம்மில் உள்ள கடமை என்ன? சண நேர உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தயாரில்லாத நிலையில் போரில் குதித்து தோல்வியை தழுவுவதா? அல்லது யத்த தந்திர ரீதயான பின்வாங்கலை (Tactical withcraw) செய்து எம்மைத்தயார் செய்வதா?

போரிடும் முறை, இடம், காலம் என்பன எப்பால் தான் தீர்மானிக்கப்பட வேண்டுமேயன்றி எதிரியினுல் அல்ல என்பது கெரில்லாப் போராட்டத்தின் அரிச்சுவடி என்பதை மறக்கக் கூடாது.

இப்போதெல்லாம் ஒவ்வொரு இயக்கமும் தாம் கெரில்லாத் தாக்குதலில் ஈடுபடுவதாகவும் இதன் மூலம் தமிழீழத்தை அமைக்கப் போவதாகவும் கூறுகின்றன. ஒரு நாட்டில் சமூக, பிரதேச அமைப்புகளையும் இராணுவச் சமநிலையையும் கருத்திற்கொண்டே அந்த நாட்டுக்குப் பொருத்தமான யுத்த தந்திரத்தை விடுதலை இயக்கங்கள் வகுக்க வேண்டும்.

இந்த வகையில் தமிழீழ போராட்டத்தை பரிசீலிப்போமாஞல் (இது பற்றி ஓர் ஆய்வு 4ம் பக்கம் உள்ளது) இந் நிலையில் ஒரு பலமான நிரந்தர மக்கள இராணுவத்தைக் கட்டி அமைத்து அதனை ஆயுதமயப்படுத்துதலும், கிராம மட்டத்திலான குறிப்பாக எல்லைப்புற கிராமங்களில் மக்கள் சுய பாதுகாப்பு குழுக்களை அமைத்தலும் அரசியல், தாபன இராணுவ நடவடிக்கைகளில் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் ஒன்றுபட்டு இயங்கும் ஒரு பலமான ஐக்கிய முன்னணியைக் கட்டுதலுமே இன்றைய அவசியத் தேவைகள் எனலாம்.

நகர்புற கெரில்லா நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் எமது தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு துணையாகவே இவை நடத்தப்படலாம். இந்த நடவடிக்கைகளின் போது போராட்ட நடவடிக்கைக்கு உதவுகிறதா அல்லது ஊறு செய்கிறதா என்பதையும் கருத்திற்கு எடுத்தல் இன்றியமையாதது.

ஒவ்வொரு இயக்கங்களும் கடந்த காலத்தில் கற்ற பாடங்களில் இருந்து புதிய யுத்தத் தந்திரங்களை வகுத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்ருேம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனி நம் குழந்தைகளும் போராடும்

சமுதாயத்தில் நிலவும் போராட்டங்கள் அந்த சமூகத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரிலும் தவிர்க்க முடியாதவாறு பாதிப்பை ஏற்படுத்தும். குழந்தைகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல.

குழந்தைகளால் தமது சொந்த அலுவல்களை புரிந்து கொள்ள முடியாத நிலையில் தமது மக்களின் போராட்ட உணர்வுகளை எப்படி ஜீரணிக்கின்றனர் என்பது உண்மையிலேயே வியப்புக்குரியதே. போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வை பெற்றவுடன் இந்தக் குழந்தைகளுக்கு வரும் இந்த வீரமும் துணிச்சலும் பிரமிக்கத்தக்கவையாகும்.

வரலாற்றில் இந்தக் குழந்தைகள் போராட்டத்தில் செலுத்திய பங்களிப்பு சாமானியமானதல்ல. வியட்நாமிலும், பாலஸ்தீனத்திலும் பல உதாரணங்களை நாம் காணலாம். இவை வருங்காலத்தில் எமது குழந்தைகளின் வீரத்தையும் எதிர்பார்த்து நிற்குமாறு எம்மை வேண்டுகின்றன.

பாலஸ்தீன அகதிகள் முகாம் ஒன்றில் இஸ்ரேல் இராணுவவீரன் ஒருவன் காவலுக்கு நிற்கின்றான். இதை அவதானித்துக்கொண்டு ஒரு 7வயது பாலஸ்தீன குழந்தை நிற்கின்றது. அதன் மனதில் தனது நிலைமையில் அவனை பார்க்கச் சகிக்க முடியவில்லை இதனால் உடனடியாக ஓடிச் சென்று அவனது கால்களைப் பிடித்தவண்ணம் பி. எல். ஓ. — இஸ்ரேல் நோ என்று கோசித்தவண்ணம் அவனது கால்களை கடிக்கின்றது. இதனால் அவ் இஸ்ரேல் இராணுவ வீரன் சினம் கொண்டு ஆத்திரம் அடைகின்றான். பொறுக்க முடியாது தனது துப்பாக்கியால் அக் குழந்தையைசுட்டுக் கொல்கின்றான்.

பாலஸ்தீன அகதிகள் முகாமுக்கு அருகாமையில் உள்ள வீதி வழியே ஐந்து இஸ்ரேல் இராணுவ வீரர்கள் ரோந்து வருகின்றனர். இதை அவதானித்த துடிப்புள்ள பாலஸ்தீன 7வயது சிறுவன் ஒருவன் அவர்களிடம் வாய் கொடுக்க நினைக்கின்றான். அவர்களிடம் சென்று வைத்திருக்கும் ஆயுதங்களைப் பற்றி கேள்விகளை தொடுக்கின்றான். அவர்கள் இவனிடம் ''ஆயுதம் அளவு உயரம் கூட இல்லை. இதைப்பற்றி உனக்கு ஏன்'' என நையாண்டி பண்ணுகின்றனர். அப்பொழுது சிறுவன் கூறுகின்றான். ''உங்களிலும் பார்க்க, நான் நன்றாக சுடுவேன். வேண்டுமென்றால் ஒரு நாணயத்தை மேல் நோக்கி சுண்டி விடுங்கள். கீழ் வருவதற்கிடையில் நான் அதற்கு சுடுகின்றேன்'' என்கின்றான். இதற்கு இசைந்து அவர்கள் ஒரு துப்பாக்கியை சுடுவதற்கு தயார் செய்து ஒவ்வொன்றாக சுடக்கூடிய நிலையில் (one by one) வைத்து அவனிடம் கொடுக்கின்றனர். பின் நாணயத்தை மேல்நோக்கி சுண்டிவிட்டு மேல் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் சிறுவன் துப்பாக்கியை தன்னியக்க (automatic) நிலைக்கு மாற்றிவிட்டு இஸ்ரவேல் வீரர்களை நோக்கி சுடுகின்றான். நான்கு வீரர்கள் கொல்லப்படுகின்றனர். தப்பிய ஒரு இஸ்ரேல் வீரன் தனது துப்பாக்கியால் அவ்வீரச் சிறுவனைச் சுட்டுக் கொல்கின்றான்.

1982ல் லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமிக்கும் வேளையில் இஸ்ரவேலின் பீரங்கிப் பிரிவு ஒன்று அகதி முகாம் பகுதியினூடாக வந்து கொண்டிருக்கின்றது. அப்பகுதியில் அகதிகளாக இருந்த பாலஸ்தீன மக்கள் பயத்தின் காரணமாக முன்பே வெளியேறி விட்டார்கள். அப்பிரிவானது சுதந்திரமாக எதிரிகள் அற்ற நிலையில் முன்னேறிக் கொண்டிருக்கும் வேளையில் முன்பு சென்ற முதலாவது பீரங்கி, ராக்கட் தாக்குதலுக்கு உள்ளாகி அழிக்கப்படுகின்றது. தொடர்ந்து சரியாக குறிதவறாமல் அடுத்தடுத்த பீரங்கிகளுமாக மொத்தம் ஏழு பீரங்கி அழிக்கப்படுகின்றது. பின்பு அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடாத்துகின்றனர். தீவிர தேடுதலின்பின் 11வயது சிறுவன் ஒருவன் பிடிபடுகிறான். பிடிபட்ட சிறுவனை தமது இராணுவ பிரிவு பொறுப்பாளரிடம் ஒப்படைக்கின்றனர். அப்பொழுது அவன் சொல்கின்றான் ''இவ்வளவு பெரிய பிரிவுக்கு எதிராக இச்சிறு குழந்தைகளே போராட தொடங்கிய பின் நாம் இவர்களுக்கு எதிராக போராடுவது என்பது அர்த்தமற்றது'' என்று கூறி தனது பொறுப்பில் இருந்து விலகிக் கொள்கின்றான்.

பாலஸ்தீனியரின் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரைப் பகுதியில் பாலஸ்தீன மக்களால் ''தாயகத்தின்'' கொண்டாட்டம் நடைபெறுகின்றது. இதன் போது மக்கள் ஆயிரக்கணக்கில் ஊர்வலமாகச் சென்றுகொண்டிருக்கின்றனர் இதன் முன்னணியில் ஒரு 12 வயது சிறுமி பாலஸ்தீன தேசிய கீதத்தை பாடிக் கொண்டு போகின்றாள். இஸ்ரேல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜே. ஆரின் சூழ்ச்சி

# தமிழ்மக்களே ஜாக்கிரதை!

ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் இனவாத அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான எதிர்ப் பிரச்சாரத்தை உலகம் முழுவதிலும் தீவிரமாகச் செய்து வருகிறது.

அதே வேளையில் விடுதலை இயக்கங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்துவதற்காக ஒருவரையொருவர் தாக்குவது போன்ற துண்டுப் பிரச்சாரங்களையும், சிறு புத்தகங்களையும் கூட வெளியிட்டு வருகிறது. அத்துடன் தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதற்காக சில ''தமிழர் குழுக்கள்'' வெளியிட்டதைப் போன்ற பிரச்சாரங்களும் விநியோகிக்கப் படுகின்றன.

இப்போது யந்திரக் கோளாறு காரணங்களால் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகாரபூர்வ வானொலி சேவையான தமிழீழத்தின் குரல்-(Voice of Tamil Eelam) இடைநிறுத்தப்பட்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் ஜே ஆரின் அரசு ''தமிழீழத்தின் குரல்'' என்ற பெயரிலேயே எங்களின் அதே அலை வரிசைகளில் ஒரு சேவையை நடத்துகிறது. இதில் விடுதலைப் புலிகளைத் தாக்கி ஒரு கட்டுரை வாசிக்கப்பட்டுள்ளது.

இதனாலெல்லாம் தமிழ் மக்களையும், விடுதலை இயக்கங்களையும் குழப்பத்திற்குள் ஆழ்த்தவும் அவர்களுக்கிடையில் பகைமையை விதைக்கவும் சிங்கள அதிகார வர்க்கம் முனைகின்றனர்.

இதனாலெல்லாம் குழப்பமடைய வேண்டாமென தமிழ் மக்களையும், விடுதலை இயக்கங்களையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் கேட்டுக்கொள்கின்றது.

இவர்கள் தக்க சமயத்தில் நாம் போராட்டத்தை கை விட்டுவிட்டதாகவும் சரணடைந்து விட்டதாகவும் கூட ஒலி பரப்பலாம். தமிழீழத்தில் கடைசித் தமிழன் இருக்கும்வரை அது ஒருபோதும் நடக்காது. எனவே தமிழ் மக்கள் விழிப்புடனிருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்

இது ஐக்கியத்திற்கான காலகட்டம் முரண்பாடுகளுக்கானதல்ல என்பதையும் கூறிவைக்க விரும்புகிறோம்.

---

போலீஸ் ஊர்வலத்தை தடுத்து சிறுமியை பாடுவதை நிறுத்தும்படி வற்புறுத்துகின்றான். ஆனால் சிறுமி வாதாடுகிறாள் அவரது கட்டளையையும் மீறிப்பாடுகின்றாள். ''இது எனது தாய்நாடு, எனது தேசிய கீதத்தைப் பாட எனக்கு உரிமை இருக்கிறது, ஆக்கிரமிப்பாளனாகிய நீ எனது உரிமையில் தலையிட முடியாது'' என்று வாதாடுகிறாள். ஆத்திரம்அடைந்த போலீஸ் கத்தியை கழுத்தில் வைத்து இனியும் பாடினால் வெட்டுவேன் என ஆத்திரத்துடன் கூறுகின்றான் இதையும் மீறிச் சிறுமி பாட அவ்வளவு மக்கள் முன் வெட்டிக் கொலை செய்யப்படுகின்றாள். அந்தச் சிறுமி தாய் நாட்டின் தேசிய கீதத்தைப் பாடியபடியே வீரமரணம் அடைகிறாள். ஆம் இனி நம்குழந்தைகள் கூட புதிய வரலாறை படைக்கத்தான் போகின்றன. தமது வருங்காலத்தை தாமே சமைக்கத்தான் போகின்றன. அவர்களுக்கு வாழ்த்தி சந்தர்ப்பம் வழங்குதல் பெற்றோர்களின் கடன்தானே.

—0—

---

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகிறது, ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல்லோருக்கும் படிக்க கொடுக்கவும்.

---

வெளியீடு: செய்தி-தொடர்பு திணைக்களம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்